செய்தி வெளியீட்டு எண். 1031 நாள்: 29.12.2009

## செய்தி வெளியீடு

## உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – கோவை 2010

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 31.12.2009 அன்று சென்னையில் கலந்தாய்வுக் கூட்டம்

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, கோவையில் வரும் ஜூன் 23ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இம்மாநாட்டினை மிகச்சிறப்பாக நடத்துவதற்காக 21 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநாட்டுக்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ள குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் கலந்தாய்வுக் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 31.12.2009 அன்று காலை 10.30 மணிக்கு சென்னை – நுங்கம்பாக்கம், தாஜ் கோரமாண்டல் ஓட்டலில் நடைபெற உள்ளது.

குழுக்களில் இடம்பெற்றுள்ள மாண்புமிகு அமைச்சர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், தொழிலதிபர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், கலைத்துறையினர், அரசு அலுவலர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.